செ.வெ.எண் : 22 /ஜுன் நாள் : 10.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 7.41 இலட்சம் கன மீட்டர் அளவிலான வண்டல்/கரம்பை மண் 8512 விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டம், வறட்சி கால குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்வதற்காக செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பை ஊக்கப்படுத்துவதற்காக இராமநாதபுரம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்படும் கண்மாய் ஊரணிகள் ஆழப்படுத்தும் பணிகளை இன்று (10.06.2017) மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம், மண்டபம் ஊராட்சிகளுக்குட்பட்ட புதுமடம், வாணி, தெற்குத் தரவை, பட்டிணம்காத்தான், பேராவூர் மற்றும் சூரன்கோட்டை ஆகிய கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் ஊரணி கண்மாய்களின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் படிந்துள்ள வண்டல் மண் படிவங்களை தமிழக அரசின் சிறப்பு உத்தரவின்படி உள்ளூர் விவசாயிகள் எடுத்துச் சென்று பயன்பெற்று வருவதையும் மற்றும் அந்த ஊரணிகளை பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் பங்களிப்புடன் ஆழப்படுத்தி வருவதையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதுமடம் கிராமத்தில் கிராம மக்கள் முழு பங்களிப்புடன் 300 அடி நீளம், 258 அடி அகலம், 8 அடி ஆழம் அளவுள்ள ஒரு ஊரணி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 5 அடி அளவிற்கு நிலத்தடி நீர் சுயஊற்றாக நிரம்பியுள்ளது. ஆழ்குழாய் மூலமான குடிநீர் திட்டங்கள் அனைத்தும் உப்பு நீராக உள்ள இந்த கிராமத்தில் புதிதாக தோண்டப்பட்டுள்ள இந்த ஊரணியில் சுயஊற்று மூலம் நிரம்பியுள்ள நீரானது சுவையான குடிநீராக உள்ளது. வறட்சி காலத்தில் தண்ணீர் தேவைக்காக மக்கள் கஷ்டப்படும் இந்த நேரத்தில் இந்த ஊரணி மூலம் தண்ணீர் நிரம்பியுள்ளதால் கிராம மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதன் மூலம் இக்கிராமத்தில் சுமார் 3500-க்கு வீடுகளில் உள்ள சுமார் 13000 பேர் பயனடைவர். மேலும், இதே போன்று இந்த மாவட்டத்தில் 7 கிராமங்களில் ஊரணியை ஆழப்படுத்தியும், புதிதாக அமைத்தும் அதிலிருந்து சுயஊற்று மூலம் நிலத்தடி நீர் வெளியாகி ஊரணியில் நிரம்பி பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர்.

பொதுவாக இந்த மாவட்டத்தில் ஆழ்குழாய் மூலமான குடிநீர் திட்டங்களில் பெரும்பாலனவை உப்பு நீராக இருக்கும் சூழலில் நிலத்தின் மேல்மட்டத்தில் 11 அடி முதல் 27 அடி ஆழம் வரை நல்ல தண்ணீர் கிடைப்பதால் இதுபோன்று புதிய ஊரணிகளை அமைத்து நிலத்தடி நீரை வெளிக்கொண்டு வருவதற்கும், உறை கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் அமைத்து தண்ணீர் எடுப்பதற்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பல வருடங்களாக தூர்வாரப்படாத கண்மாய் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் அமைந்துள்ள அனைத்து அணைகள், கண்மாய்கள், குளங்கள் ஆகிய நீர் ஆதாரங்களில் படிந்துள்ள வண்டல்/கரம்பை மண்ணை பருவமழைக்கு முன்பாக தூர்வாரி பொதுமக்கள் பயனடையும் விதமாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையின் மூலம் மேற்காணும் பணியினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அதன்படி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, விவசாயத்துறை மற்றும் கனிமவளத்துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் ஆகியோர் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி, தூர்வாரப்படும் வண்டல்/கரம்பை மண் விவசாயிகள், மண்பாண்டத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. நாளது தேதி வரை 816 கண்மாய் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணியினை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 7.41 இலட்சம் கனமீட்டர் அளவிலான வண்டல்/கரம்பை மண் 8512 விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர். மேலும் வண்டல்/கரம்பை மண் தேவைப்படும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரை அணுகி உரிய அனுமதியுடன் வண்டல்/கரம்பை மண் எடுத்துச்செல்லலாம் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்து வருவதால் மழைக்காலத்திற்குள் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மண் எடுத்து பயனடையலாம்.

மேலும், இன்றைய நிலவரப்படி இந்த மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்வதற்காக 215 கிராமங்களில் புதிய கிணறுகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பொதுமக்களால் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவை தவிர ரூ.18.17 கோடி மதிப்பில் 1028 பணிகளை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டு 90% பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.செல்லத்துரை, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**